


திருவாரூர் மாவட்ட கலை இலக்கியப் பகுத்தறிவுப் பேரவையின் ஒன்றிய, நகர, பேரூர்க் கழகங்களின் புதிய பொறுப்பாளர்களின் அறிமுக ஆலோசனைக் கூட்டம், மாவட்டச் செயலாளர் பூண்டி கே.கலைவாணன் எம்.எல்.ஏ. தலைமையில், மாவட்ட ஊராட்சி துணைத் தலைவர் சேகர் கலியபெருமாள், ஒன்றியக் குழுத் தலைவர் புலிவலம் ஏ.தேவா, நகரச் செயலாளர் வாரை எஸ்.பிரகாஷ் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் கலை, இலக்கிய பகுத்தறிவுப் பேரவை மாவட்ட அமைப்பாளர் ராஜ் (எ) கருணாநிதி, மாவட்ட தலைவர் ராசு. இளங்கோவன், துணைத் தலைவர் ராம கலைச்செல்வன், துணை அமைப்பாளர்கள் பார்த்தசாரதி, முருகானந்தம், பாலாஜி, ஜெயபால் மற்றும் கலை இலக்கியப் பகுத்தறிவுப் பேரவையின் ஒன்றிய, நகர, பேரூர்க் கழக நிர்வாகிகள் பங்கேற்றனர்.



மயிலாடுதுறை மாவட்டம், செம்பனார்கோயில் மத்திய ஒன்றியம் பெருமாள்நல்லூர் ஊராட்சி, திருக்கடையூர் ஊராட்சிகளில் இருந்து அ.தி.மு.க., பா.ம.க. கட்சிகளில் இருந்து செட்டிமேடு, பிள்ளைபெருமாள் பகுதியைச் சேர்ந்த 150 பேர் அக்கட்சிகளில் இருந்து விலகி மயிலாடுதுறை மாவட்டக் கழகச் செயலாளர் நிவேதா எம்.முருகன் எம்.எல்.ஏ. முன்னிலையில் கழகத்தில் இணைந்தனர். உடன் ஒன்றியக் கழகச் செயலாளர்கள் அமிர்த.விஜயகுமார், எம்.அப்துல்மாலிக், ஒன்றியக் குழு துணைத் தலைவர் பாஸ்கரன், தரங்கம்பாடி பேரூர் செயலாளர் முத்துராஜா மற்றும் பலர் உள்ளனர்.

## திருமருகல் தெற்கில் துணை முதல்வர் பிறந்த நாள் விழா!

நாகை, டிச.23 -

நாகை மாவட்டம் திருமருகல் தெற்கு ஒன்றியம் பில்லாளியில் மாவட்ட துணைச் செயலாளர் ஆரூர் மணிவண்ணன் ஏற்பாட்டில் கழக இளைஞர் அணி செயலாளர், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாள் விழா, கொடி ஏற்று விழா நடைபெற்றது.

விழாவிற்கு திருமருகல் தெற்கு ஒன்றியச் செயலாளர் ஆர்.டி.எஸ்.சரவணன் தலைமை தாங்கினார். மாவட்டக் கழக துணைச் செயலாளர் ஆரூர்மணிவண்ணன் முன்னிலை வகித்தார். கிளை செயலாளர் சரவணன் வரவேற்றார். விழாவில் கழகக் கொடியை மாவட்டக் கழகச் செயலாளரும், தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத்தலைவர் என்.கௌதமன் ஏற்றி வைத்து சிறப்புரையாற்றினார்.

விழாவில் மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் பி.என்.கார்த்தி, ஒன்றிய துணைச் செயலாளர் துரையரசன், ஒன்றிய பொருளாளர் கலியமூர்த்தி, ஊராட்சி மன்ற தலைவர்கள் பாண்டியன், உத்திராபதி, சுந்தராஜன் மற்றும் கிளைக் கழக நிர்வாகிகள், சார்பு அணி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.





துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு புதுக்கோட்டை வடக்கு மாவட்ட தி.மு.க. இலக்கிய அணி சார்பில் குன்றாண்டார் கோவில் ஒன்றியம் குளத்தூரில் நடைபெற்ற இலவச கண் சிகிச்சை முகாமை கழக இலக்கிய அணி துணைத் தலைவர் கவிச்சுடர் கவிதைப்பித்தன் தலைமையில் புதுக்கோட்டை வடக்கு மாவட்டச் செயலாளர் வழக்கறிஞர் கே.கே.செல்லப்பாண்டியன் முகமை தொடங்கி வைத்தார். நிகழ்வில் விராலிமலை தொகுதி பொறுப்பாளர் துணை மேயர் அஞ்சுகம் பூபதி, மாநில விவசாயத் தொழிலாளர் அணி துணைச் செயலாளர் கே.ஆர்.என்.போஸ், செ.அசோக் பாண்டியன், டி.செல்வம், டாக்டர் செ.குறிஞ்சிவாணன், வி.என்.எம்.பாலு, மணிமொழி மனோகரன், கவிஞர் அ.மரிய எட்வின், பிரபுகண்டின், பன்னீர், என். ராஜமாணிக்கம், கவிஞர் சௌமா, பாப்பம்பட்டி கமருதின், புது பொன் ராமன், சிப்காட் சந்திரசேகரன் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர். நிகழ்ச்சி ஏற்பாடு மாவட்ட இலக்கிய அணி துணை அமைப்பாளர் குளத்தூர் ஓ. ஆறுமுகம் ஆகியோர் உள்ளனர்.

அமிர்த.விஜயக்குமார் ஏற்பாட்டில்! செம்பனார்கோயிலில்

## அ.தி.மு.க.வினர் 150 பேர் கழகத்தில் இணைந்தனர்!

### நிவேதா எம்.முருகன் எம்.எல்.ஏ. முன்னிலையில் எம்.அப்துல்மாலிக் - எஸ்.கே.முத்துராஜா பங்கேற்பு!

மயிலாடுதுறை, டிச.23 -

மயிலாடுதுறை மாவட்டம் செம்பனார்கோயில் மத்திய ஒன்றியத்தில் இருந்து அ.தி.மு.க., பா.ம.க. உள்ளிட்ட கட்சிகளைச் சேர்ந்த 150 பேர் அக்கட்சிகளில் இருந்து விலகி தி.மு.க.வில் இணையும் நிகழ்ச்சி பொறையாற்றில் கலைஞர் அரங்கில் நடைபெற்றது.

நிகழ்ச்சிக்கு செம்பனார்கோயில் மத்திய ஒன்றியக் கழகச் செயலாளர் அமிர்த. விஜயகுமார் தலைமை தாங்கினார்.

செம்பனார்கோயில் தெற்கு ஒன்றியச் செயலாளர் எம்.அப்துல்மாலிக் முன்னிலை வகித்தார்.

ஒன்றியக் குழு துணைத் தலைவர் பாஸ்கரன் வரவேற்றார்.

நிகழ்ச்சியில் பெருமாள் நல்லூர் ஊராட்சி, திருக்கடையூர் ஊராட்சிகளில் இருந்து அ.தி.மு.க., பா.ம.க. கட்சிகளில் இருந்து செட்டிமேடு, பிள்ளைபெருமாள் பகுதியைச் சேர்ந்த அ.தி.மு.க. ஒன்றிய மாணவர் அணி செயலாளர் தமிழரசன், முன்னாள் கிளைச் செயலாளர் சுரேஷ்கண்ணன், 150 பேர் அக்கட்சிகளில் இருந்து விலகி மயிலாடுதுறை மாவட்டக் கழகச் செயலாளரும், பூம்புகார் சட்டமன்ற உறுப்பினர் நிவேதா எம்.முருகன் முன்னிலையில் கழகத்தில் இணைந்தனர்.

கழகத்தில் இணைந்தவர்களுக்கு இரு வண்ண கைத்தறி ஆடை அணிவிக்கப்பட்டு கழகத்தில் இணைத்துக் கொள்ளப்பட்டது.

நிகழ்ச்சியில் தரங்கம்பாடி பேரூர்ச் செயலாளர் எஸ்.கே.முத்துராஜா, தரங்கம்பாடி பேரூராட்சி தலைவர் சுகுணாசங்கரி குமரவேல், துணைத் தலைவர் பொன்.ராஜேந்திரன், மாவட்ட அயலக அணி அமைப்பாளர் வைத்தியநாதன், மாவட்ட தொழிலாளர் அணி துணை அமைப்பாளர் திருக்கடையூர் இரா. செந்தில், ஒன்றிய மகளிர் அணி அமைப்பாளர் அனிதாஸ்டாலின், ஊராட்சி மன்ற தலைவர் தீபா முனுசாமி, ஒன்றிய மீனவர் அணி அமைப்பாளர் சங்கர், ஒன்றிய இளைஞர் அணி அமைப்பாளர் மாரியப்பன் மற்றும் ஒன்றிய, கிளைக் கழக நிர்வாகிகள் உள்ளனர்.

## ரிஷிவந்தியத்தில் ரூ.39.85 லட்சத்தில் புதிய கட்டிடம்!

### வசந்தம் க.கார்த்திகேயன் எம்.எல்.ஏ. திறந்து வைத்தார்!

ரிஷிவந்தியம், டிச.23 –

ரிஷிவந்தியத்தில் ரூ.39.85 லட்சம் மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்ட துணை வேளாண்மை விரிவாக்க மைய புதிய கட்டிடத்தை தெற்கு மாவட்ட கழக செயலாளர் வசந்தம் க.கார்த்திகேயன் எம்.எல்.ஏ பொதுமக்கள் மற்றும் விவசாயிகள் பயன்பாட்டிற்கு திறந்து வைத்தார்.

கள்ளக்குறிச்சி மாவட்டம், வாணாபுரம் வட்டம், ரிஷிவந்தியத்தில் துணை வேளாண்மை விரிவாக்க மைய அலுவலகம் இயங்கி வருகிறது,இங்கு இடவசதி இல்லாமலும்,பராமரிப்பு பணி செய்வதிலும் சிரமம் இருப்பதால் புதிய துணை வேளாண்மை விரிவாக்க மைய அலுவலக கட்ட வேண்டும் என்று இப்பகுதி மக்கள் ரிஷிவந்தியம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் வசந்தம் க.கார்த்திகேயனிடம் கோரிக்கை வைத்தனர். இதுகுறித்து வசந்தம் க.கார்த்திகேயன் எம்.எல்.ஏ. தமிழக முதல்வர், கழகத் தலைவர், சமூக நீதி காவலர், திராவிட நாயகர் மு.க.ஸ்டாலின் அவர்களின் கவனத்திற்கு கொண்டு சென்றார்,

திராவிட மாடல் நல்லாட்சியில் மக்களின் கோரிக்கையை ஏற்ற நமது தமிழக அரசு புதிய துணை வேளாண்மை விரிவாக்க மைய அலுவலகம் கட்ட நபார்டு ஆர்.ஐ.டி.எப் திட்டத்தின் கீழ் 39.85 லட்சம் மதிப்பீட்டில் நிதி ஒதுக்கீடு செய்தது,இதன் பின்னர் கடந்த 2022ம் ஆண்டு அக்.16ம் தேதி ரிஷிவந்தியத்தில் புதிய துணை வேளாண்மை விரிவாக்க மைய அலுவலகம் அமைக்க கட்டுமான பணிக்கான பூமி பூஜையை வசந்தம் க.கார்த்திகேயன் எம்.எல்.ஏ அடிக்கல் நாட்டி துவக்கி வைத்தார், கட்டுமானப் பணிகள் முடிந்ததை அடுத்து திறப்பு விழா நேற்று முன்தினம் (20.12.2024) வெள்ளிக்கிழமை அன்று நடைபெற்றது,இந்த விழாவிற்கு தெற்கு மாவட்ட கழக செயலாளர் வசந்தம் க.கார்த்திகேயன் எம்.எல்.ஏ சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு பொதுமக்கள் மற்றும் விவசாயிகள் பயன்பாட்டிற்கு புதிய கட்டிடத்தை திறந்து வைத்தார், தொடர்ந்து பயனாளிகளுக்கு விதை பொருள்கள் அடங்கிய பெட்டகத்தை வழங்கினார்.

இதில் ஒன்றிய கழக செயலாளர்கள் பெருமாள். துரைமுருகன், ஒன்றிய சேர்மன் வடிவுக்கரசி சாமி சுப்ரமணியன், மாவட்ட கவுன்சிலர் கோவிந்தராஜன், பொதுக்குழு உறுப்பினர் ராஜு, ரிஷிவந்தியம் கிளை செயலாளர்கள் சிவ முருகன், கண்ணன், பன்னீர் செல்வம், வேளாண் இணை இயக்குனர் சத்தியமூர்த்தி, ரிஷிவந்தியம் உதவி இயக்குனர் சியாம் சுந்தர்,வேளாண்மை உதவி இயக்குனர் முருகன், துணை வேளாண்மை அலுவலர் செந்தில்குமார், உதவி வேளாண்மை அலுவலர்கள் வேலு, வினோத் குமார், ராஜேஷ், சீனிவாசன், வட்டார தொழில் நுட்ப மேலாளர் சாட்டர்ஜி, கிடங்கு மேலாளர் பிரதீப் ராஜ்,ஊராட்சி மன்ற தலைவர் வினிதா மகேந்திரன், முன்னாள் ஒன்றிய கவுன்சிலர் இதயத்துல்லா உள்ளிட்ட கழக நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள்,அரசு அதிகாரிகள் துறை சார்ந்த அலுவலர்கள் பொதுமக்கள் விவசாயிகள் உட்பட பலர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

## திராவிட மாடல் முதல்வர்தான் எட்டாம் வள்ளல்!



மாமன்னர் ஸ்டாலின் இங்கு ஆட்சி செய்கிறார்
தமிழ்நாட்டு மக்களுக்கு விடியல் தருகிறார்
மன்னராட்சி இல்லை ! இது மாமன்னர் ஆட்சி
செந்தமிழன் ஸ்டாலின் ஆட்சி என்று சொல்லுவோம் !

குடிசைவீட்டில் கும்பிகாய்ந்து கிடந்த மக்களைக்
காரைவீட்டில் குடியேற வைப்பவர் யாரு?
கஞ்சித்தண்ணி குடிப்பதற்கே வழியில்லாதோர்க்கும்
மூணுவேளை அரிசிச்சோறு தருபவர் யாரு?

தொலைவில் நின்று கோபுரத்தைக் கும்பிட்டோரை
அர்ச்சகராய்க் கோயிலுக்குள் அழைப்பவர் யாரு?
சாதிஇல்லா சமதர்மக் குடியிருப்பென்று
சமத்துவபுரம் சமூகநீதி காப்பவர் யாரு?

ஆம்புலன்ஸ் சேவைகளை இலவசம்ஆக்கி
எளியோரின் பதைபதைப்பைக் குறைப்பவர்யாரு
இன்னுயிரைக் காப்போம்என உயிர்காக்கின்ற
மருத்துவக்காப் பீடுதிட்டம் கொடுப்பவர்யாரு

மாற்றுத் திறனாளிக்கும் இடஒதுக்கீடு
திருநங்கைப் பெண்களுக்கும் இடஒதுக்கீடு
தமிழ்வழியில் படித்தோர்க்கும் இடஒதுக்கீடு
இல்லந்தேடிக் கல்விஅள்ளிக் கொடுப்பவர்யாரு?

அடுப்படியில் முடங்கிய நம்தாய்மார்க் கெல்லாம்
பேருந்து விடியல் பயணம் தருபவர்யாரு?
அஞ்சும் பத்தும் இல்லாத மகளிர் கணக்கிலே
ஆயிரமாம் உரிமைத் தொகை விடுப்பவர்யாரு?

விதவைஎன்று கண்ணீர்விட்ட பெண்களுக் கெல்லாம்
முன்னேற்றத் திட்டங்கள் கொடுப்பவர் யாரு?
மகளிர்சுய உதவிக்குழு அரியணையோடு
வருமானச் செங்கோலும் தருபவர் யாரு?

இருமொழிதான் நமதுகொள்கை என்று போராடித்
தமிழர்களை உலகில் வெல்ல வைப்பவர் யாரு?
பொட்டைப்புள்ள ஆனாலும் குடும்பச் சொத்திலே
சொத்துரிமை உண்டுஎன்று சொல்பவர் யாரு?

புதுமைப்பெண் தழிழ்ப்புதல்வன் தோழிவிடுதி
தொழில் முனைவோர் மானியங்கள் கலைஞர் நூலகம்
கோயில்களில் குடமுழுக்கு சமச்சீர் கல்வி
உழவர்சந்தை சாதனைகள் செய்பவர் யாரு?

சேரசோழ பாண்டியரின் ஆட்சி என்று
வரலாறு படித்ததுண்டு திராவிட மாடல்
முதல்வர்ஆட்சி மாமன்னர் ஆட்சி என்போம்
எல்லோர்க்கும் எல்லாம்தரும் மாட்சி என்போம்

தமிழ்ஏழு வள்ளல்கதை இலக்கியம் சொல்லும்
திராவிட முதல்வர்தான் எட்டாம் வள்ளல்
மாமன்னர் ஸ்டாலின் ஆட்சி என்றும் வெல்லும்
எப்போதும் தி.மு.க.தான் உலகை ஆளும்!



**கவிஞர் திருமதி. ஆண்டாள் பிரியதர்ஷினி**
தி.மு.க. தலைமைக் கழக செய்தித் தொடர்பு துணைத் தலைவர்

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### எவரெஸ்ட் கோ.நடராசன்
### டிசம்பர் 23 (2003)



திருவண்ணாமலை மாவட்டம், போளூர் பேரூர்க் கழகச் செயலாளராக இரு முறையும் – மாவட்ட துணைச் செயலாளராக மூன்று முறையும் பொறுப்பு வகித்தவர்.

போளூர் நகர வங்கித் தலைவராகவும், தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கித் தலைவராகவும் பணியாற்றி அப்பகுதி மக்களின் நன்மதிப்பைப் பெற்றவர்.

இந்தி எழுத்து அழிப்புப் போராட்டம், இலங்கைத் தமிழர் ஆதரவுப் போராட்டம், சட்ட நகல் எரிப்புப் போராட்டம் என கழகம் அறிவித்த பல்வேறு போராட்டங்களில் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### பெ. ஏழுமலை
### டிசம்பர் 23 (2018)



கழகக் கொள்கையில் ஈர்க்கப்பட்டு, கழகத்தில் இணைந்து பணியாற்றியவர்.

திருவள்ளூர் மாவட்டத்தில் கிளைப் பிரதிநிதி, சோழவரம் ஒன்றியச் செயலாளர், பொதுக்குழு உறுப்பினர், ஒன்றிய அவைத்தலைவர் என பல்வேறு பொறுப்புகள் வகித்து கழகப் பணியாற்றியவர்.

இரு முறை பாடியநல்லூர் ஊராட்சி மன்றத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு அப்பகுதி மக்களின் நன்மதிப்பைப் பெற்றவர்.

உயர்நிலைப் பள்ளி அமைப்புக்குழுத் தலைவர், காரனோடை அவுசிங் சொசைட்டி தலைவர் என பதவி வகித்தவர்.

கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.